Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 52

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 21 ஹிஜ்ரி பிறை 30 (3 4 65) சனிக்கிழமை

## சதிவழக்கு தீர்ப்பு

### பொதுமக்கள் அக்கறை

கொழும்பு, வெள்ளி

சதிவழக்கின் இம்மாதம் 6-ந் திகதி செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது. தீர்ப்பை அறிந்து கொள்வதற்காக சதிவழக்கு நீதிமன்றத்தில் பொது மக்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் முழுவதும் இப்பொழுதே பதிவு செய்யப்பட்டுவிட்டன. நீதிமன்றப் பதிவு காரியஸ்தரிடம் இதற்கான 'பர்மிட்டுகள்' பெறப்பட்டுவிட்டன.

மில்க்வைற்

நீல சோப்

விலை குறைத்தல்

1-4-65 தொடக்கம்

மில்க்வைற் நீலசோப் ஒரு கேசுக்கு ரூ. 1/- விலை குறைத்துள்ளோம் என்பதைசந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# கூப்பனின்றி துணி கிடைக்கும்

## விரைவில் நடவடிக்கை எடுக்க வர்த்தக மந்திரி திட்டம்

கொழும்பு, வெள்ளி

இப்போதிருக்கும் கூப்பன் முறையை நீக்கி கூப்பன் இன்றியே பொதுமக்கள் தேவைப்படும் துணிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தாம் விரைவில் நடவடிக்கை எடுக்கப்போவதாக வர்த்தக மந்திரி திரு. வி. பி. பீரிஸ் அறிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வர்த்தக மந்திரி மேலும் தெரிவித்துள்ளதாவது:

துணிகளுக்கான கூப்பன் முறையை விரைவில் நீக்கிவிடுவதே எனது நோக்கம். இப்போதுள்ள துணிக் கையிருப்பு நிலைமையை உத்தேசித்தும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாகவும் நிலைமை சீராகும்வரை கூப்பன் முறை தொடர்ந்திருக்க அனுமதிக்கவேண்டியிருக்கின்றது. தமிழ்-சிங்கள புதுவருடத்தின்போது துணி தாராளமாகக் கிடைக்கக்கூடியவகையில் இப்போதிருந்து இம்மாதம் 15ந் திகதிவரை பின்வரும் ரகத் துணிகளை கூப்பனின்றியே பொதுமக்கள் பெறக்கூடிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன்.

கூப்பனின்றிப் பெறக்கூடிய ரகங்கள்:

'இந்தியன் லோங்குளோத் 36", 'ரஷ்யன் லோங்குளோத் 36", 'மெட்ரோ பட்டனின்', 'கிறே லோங் 36".

### ஒரு புள்ளிக்கு 6 யார் துணி

ஒரு கூப்பன் புள்ளிக்கு 6 யார் நீளமுள்ள ஒரு சேலை அல்லது இறக்குமதிசெய்யப்பட்டுள்ள ஒரு சாரம் அல்லது வேஷ்டி பெறக்கூடியதாக இருக்கும். இம்மாதம் 15ந் திகதிக்குப் பின்னர் இன்னும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டுக்கு டட்லி செல்வார்

### திரு. வில்சனுக்கு அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

ஜூன் மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா கலந்துகொள்வார்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சனுக்கு அனுப்பியுள்ள செய்தியில் அவர் இதுபற்றித் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை—பிரிட்டன் தொடர்பு மதிப்பு பெற்று விளங்குவதாயும், தமது பதவிக்காலத்தில் இத்தொடர்பு மேலும் அதிகரிக்கும் என நம்புவதாயும் திரு. டட்லி தெரிவித்திருக்கிறார்.

திரு. டட்லி பிரதமமந்திரியாகப் பதவி ஏற்றதைப் பாராட்டி இந்தியப் பிரதமர் திரு சாஸ்திரி, ரஷ்யப்பிரதமர் கோஸிஜின் கனடா பிரதமர் திரு லெஸ்டர்பியர்ஸன் ஆகியோர் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

திரு டட்லி இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள செய்தியில் இலங்கை—இந்திய இருநாடுகளுக்குமிடையேயான தொன்மையான தொடர்பு தமது பதவிக்காலத்தில் மேலும் நெருக்கமாகும் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

## தமிழரசுக்கு யு. என். பி. கொடுத்த வாக்குறுதி என்ன?

### அதிக உரிமை அளிக்க கோரும் திருத்தப் பிரேரணை வருமா?

கொழும்பு, வெள்ளி

தமிழரசுக்கட்சிக்கு தேசிய அரசாங்கம் அளித்துள்ள உறுதிமொழிகள் என்ன? சிம்மாசனப்பிரசங்கத்தில் என்னென்ன உறுதிமொழிகளை தேசியஅரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது? இந்தக் கேள்விகள் இப்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்காசமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி வட்டாரங்களில் கேட்கப்படுகின்றன.

இரண்டு தினங்களுக்கு முன்னர் ஹொரகொலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பார்லிமெண்டரிக்குழுக்கூட்டம் நடைபெற்றபோது முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித்தலைவருமான திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா பேசுகையில் இப்பொழுது நிலைமையைக் கவனித்துவருவதாகவும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடுபற்றி மேலும் விபரங்கள் அறிந்துகொள்ள முயற்சிசெய்யப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

### திரிசங்கு நிலை

தமிழ்பேசும்மக்களின் உரிமைகள் சம்பந்தமாக தேசிய அரசாங்கம் என்ன உறுதிகள் அளித்துள்ளபோதிலும், தமிழ்பேசுமமக்களுக்கு அதிக சலுகைகள் வழங்கக்கூடிய முறையில் திருத்தப்பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சியினர் கொண்டுவரக்கூடுமென்று கொழும்பில் அரசியல்வட்டாரங்கள் கருதுகின்றன. தமிழ்பேசும்மக்களுக்கு "அதிக உரிமை" அளிக்கும் அடிப்படையில் எதிர்க்கட்சியினர் திருத்தப்பிரேரணைகொண்டு வரும் பட்சத்தில் அதை எதிர்த்து வாக்களிக்கமுடியாத இக்கட்டான நிலை தமிழரசுக்கட்சிக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## ரூபா 2516 இந்திய கரன்ஸி காரைநகர் துறையில் கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

2516 ரூபாய்களான இந்தியக் கரன்ஸி நோட்டுக்கள் காரையூர்த்துறையில் ஒரு இளைஞன் வைத்திருந்த சூட்கேஸிலிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயத்தைச் சேர்ந்த குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பு அதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. சௌவுந்தராஜாவினால் கைப்பற்றப்பட்டது.

தகவல் கிடைத்ததன் பேரில் காரையூர்த்துறைக்குச் சென்ற இன்ஸ்பெக்டர் அங்கு நின்ற இந்திய இளைஞனின் கையிலிருந்த 'சூட்கேஸ்'ஸை பரிசோதனையிட்டார். அதற்குள் இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்தியொரு ரூபாய்க்கான கரன்ஸி நோட்டுக்களும் வேறுசில பொருட்களும் இருக்கக் காணப்பட்டன.

இளைஞனுடன் சூட்கேஸையும் கஸ்டம்ஸ் பகுதியினரிடம் இன்ஸ்பெக்டர் ஒப்படைத்தார். 'சூட்கேஸ்' சோதனையிடப்பட்டபோது அங்கு கஸ்டம்ஸ் பகுதியைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்களும் நின்றனராம்.

## சிம்மாசனப் பிரசங்கத்தில் முக்கிய அம்சங்கள்

### மந்திரிகள் விவாதம்

கொழும்பு, வெள்ளி

சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்க்கவேண்டிய யோசனைகளை இன்று மாலை கூடிய மந்திரிசபை பரந்த அளவில் விவாதித்தனர்.

வாழ்க்கைச்செலவை குறைத்தல், பொருளாதார அபிவிருத்திக்கு ஊக்கமளிக்க நடவடிக்கை, லஞ்சம், ஊழலை சிறந்த முறையில் கண்காணித்தல் ஆகிய விஷயங்கள் பற்றி அவர்கள் ஆராய்ந்ததாகத் தெரிகிறது.

சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்க்க தங்கள் அமைச்சின் மூலம் யோசனைகளை ஒவ்வொரு மந்திரியும் சமர்ப்பிப்பார்கள்.

மொழி உரிமை பற்றிய தங்கள் கொள்கைகளையும் மந்திரிகள் ஆராய்வார்கள். லஞ்ச ஊழலை ஒழிக்க விசேஷ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏப்ரல் 9-ந் திகதி சிம்மாசனப் பிரசங்கம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்.

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு

திறமான

★ இரும்புச் சாமான்களும்

★ பெயின்டுவகைகளும்

★ அஸ்பஸ் சீட்டுகளும்

★ மர வகைகளும்

எம்மிடம்

பெற்றுக்கொள்ளலாம்.

விஷ்ணு

ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்

வல்வெட்டித்துறை

## ஆசிரியர்கள் குறைகளை ஆராய மூவர் கமிட்டி

கொழும்பு, வெள்ளி

அரசியல் நோக்கத்துடன் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களும் கடந்த ஆறு மாதகாலத்துக்குள் திடீர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களும் தங்கள் கஷ்டங்களையும் குறைகளையும் தெரிவித்து நிவர்த்திதேடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவிருக்கிறது.

சென்ற ஆறுமாதகாலத்துக்குள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் கஷ்டங்களையும் முறைப்பாடுகளையும் தனித்தனியாக அறிந்து ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு மூவர் கொண்ட ஒரு கமிட்டியை கல்வி மந்திரி நியமித்துள்ளார்.

[illegible] அல்வாசப் பகுதி உதவி வித்தியாதிபதி திரு. ஜி குலத்துங்காவும் அங்கம் வகிக்கின்றனர். [illegible] கமிட்டி [illegible] திரு. சோமபால [illegible] மற்றொரு உதவி வித்[illegible] இக்கமிட்டியில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வி உலகில் நிலவும் குழப்பம்; கல்லூரி அதிபர்களின் கஷ்டம்"

## கலாநிதி வித்தியானந்தன் விளக்கம்

மாவிட்டபுரம், வெள்ளி "இன்றைய கல்வி உலகு பெரிய குழப்பமான நிலையிலேயே இருக்கின்றது. பெருக்கெடுத்த கடலிலே தத்தளிக்கும் மாலுமிகள் போலக் குழப்பமான ஒரு சூழலிலே தத்தளிக்கின்றனர் கல்லூரி அதிபர்கள். தேசிய சூழ்நிலைக்கு ஏற்ப அமையாத கல்வித்திட்டம், கல்லூரித் தேவைகளைப் பொருட்படுத்தாத ஆசிரியர் நியமனங்கள். திடீர் இடமாற்றங்கள். தகுதியைக் கவனியாது மாணவரை ஆண்டுதோறும் வகுப்பேற்ற வேண்டுமென்ற விபரீதமான ஆணை திணிக்கடபடும் பாடப்புத்தகங்கள், சம்பளத்திற்கு மட்டும் வேலைசெய்யும் ஆசிரியர்களின் கவனக் குறைவு பிரிவினைகள், கட்டுப்பாட்டுக்கு அடங்காத மாணவரின் ஒழுங்கீனம், ஒன்றோடொன்று முரண்படும் கல்வி இலாகாச் சுற்று நிருபங்கள், அரசியல் தலையீடு ஆகியவை தலைமை ஆசிரியர்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் ஓயாத தலையிடியை நாள்தோறும் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. கல்வி உலகில் நல்ல காலம் பிறக்குமென்ற நம்பிக்கையில் கல்லூரித்தலைவர்கள் ஏதோ சமாளித்துக்கொண்டு போகிறார்கள். இப்பொழுது எங்கும் சமாளிப்புத்தான்".

கேற்றிரவு நடைபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரிப் பரிசளிப்பு விழாவின்போது பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழா கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது. அதிபர் தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார், பரிசில் பெற்றவர்களுக்கு திருமதி சா. ஜே. வே. செல்வநாயகம் சான்றிதழ்களையும் வெள்ளிக்கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

கலாநிதி சு. வித்தியானந்தன் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

"எமது நாட்டிலே பள்ளிக்குச்செல்லும் மாணவர் தொகை 25 லட்சம் இதில் சாதாரண தராதரத் தேர்வுக்கு ஒன்றரை லட்சம் மாணவர் தோற்றுகின்றனர். 1963-ம் ஆண்டு பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வுக்குத் தோற்றிய மாணவர் தொகை 18,000 சென்ற ஆண்டின் இறுதியில் பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வுக்குப் பதிலாக நடாத்தப்பட்ட உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர் தொகை 55,000

### பட்டதாரிகள் போதாது

இது நலமொரு அறிகுறி; விரும்பத்தக்கதும்கூட. ஆனால் இதன் பலாபலன் என்ன? பொதுத் தராதரத் தேர்வுக்கு எழுதும் மாணவரில் நூற்றுக்கு 25 வீதத்தினரே அத்தேர்வு த்திரம் பெற்றபோதும் பல்கலைக்கழகப்புகுமுகத்தேர்வுக்கு எழுதுவோரில் நூற்றுக்கு பத்து வீதத்தினர் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றபோதும் சிரேஷ்ட பாடசாலையில் கல்வி முடித்து வெளியேறுவோரும் பல்கலைக்கழகப்பட்டதாரிகளும் வேலையின்றித் திண்டாடுகின்றனர் இந்து எவ்வாறாயினும் இந்நாட்டில் பட்டதாரிகளை நம் மேலதிகமாக உற்பத்தி செய்யவில்லை என்பதனை நான் அழுத்திக் கூறவிரும்புகிறேன்.

இதுகேட்பதற்கு விரோதமாக, உண்மைக்கு விரோதமாகத்தோன்றக்கூடும் படித்து வேலையற்று இருபோர் பலர் இருக்கின்றனர் ஆனால் பட்டதாரிகள் தொகை மேலதிகமானதல்ல என்கிறேன் இதனைச் சிறிது விளக்குதல் நலம் அதாவது ஒருகோடி மக்கள் வாழும் இந்நாட்டிலே ஆண்டுதோறும் 900 பட்டதாரிகள் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறுவது பெருந்தொகையன்று ஜனத்தொகையை நோக்கும்போது, பட்டதாரிகளின் தொகை போதாதென்றே கூறவேண்டும், ஆனால் எமது நாட்டின் பொருளாதார அமைப்பு பட்டதாரிகளின் தொகையை மிகப்பெரிய தொன்றாகக் காட்டுகின்றது. உண்மையில் அப்படியன்று

### வேலையில்லாப் பிரச்னையே பெரிது

இன்று தமிழ்பேசும் இளைஞரை எதிர்நோக்கும்பிரச்னைகளில் மிகவும் கவலைக்குரியது வேலையின்மைப் பிரச்னையே. ஆனால் எனது அபிப்பிராயப்படி, இது தற்காலிகப் பிரச்னையே. விஞ்ஞான ரீதியாகத் திட்டங்களை அமைப்பதன் வாயிலாக, பொருளாதாரத்திட்டத்தோடு எமது கல்வியை இணைப்பதன் வாயிலாக இப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளலாம். இன்றும் தமிழ்பேசும்மக்களின் பொருளாதாரம் அரசாங்க உத்தியோகத்தையும், சம்பாத்தியத்தையும் அடிப்படையாகக்கொண்டுவருகின்றது இது இயற்கைக்கு மாறான ஓர் அடிப்படை. பிறரை நம்பி வாழும் மனப்பான்மையை வளர்ப்பது. இது நீண்டகாலம் நிலைக்காது. முன்பு உழைத்துச் சேகரித்த பணம் இன்னும் சிலகாலம் எம்மைத் தாக்கப்பிடிக்கக்கூடும். அதன் பின் ...

### மூலப்பொருட்களை விருத்தி செய்யவேண்டும்

1958-ம் ஆண்டில் எமக்குக் கிடைத்த அடியும் உதையும் எம்மை ஓரளவிற்கு விழிக்கச் செய்தன அதன்பயனாகப் பலர் எமது பொருளாதார அமைப்பை மாற்ற முயன்றனர். தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் புதிய கைத்தொழில்களும் விவசாய அபிவிருத்தி முறைகளும் தோன்றின, ஆனாலும் இவை போதா. பொருளாதாரமூலப் பொருட்களை விருத்திசெய்தல் பற்றிப் போதிய ஆராய்ச்சி இன்னும் நடைபெறவில்லை. இதில் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் கூடிய கவனம் செலுத்தி பொருளாதார விருத்திக்கு ஆவனசெய்வாரயின் எமது பிரச்னைகள் பல தீரும்;

### மாணவர் நிலை

இப் பரிசளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த நான் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கவேண்டியவனாக இருக்கின்றேன். பல்கலைக்கழக புகுமுகத்தேர்வில் தோற்றும் மாணவரில் நூற்றுக்கு பன்னிரண்டு வீதமாணவர் மட்டும் சித்தியடைவதற்கு காரணம் யாவை? முதலாவதாக கல்லூரிக் கல்விக்கும் பல்கலைக் கழகக் கல்விக்கும் இணைப்பு இல்லை- பல்கலைக்கழக படிப்புக்கு அடிப்படைத் தகுதியில்லாதோர் பலர் பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளில் படிக்கின்றார்கள். அதனால் கல்வியில் வீண்விரயம் ஏற்படுகின்றது. மூன்று தடவை தேர்வுக்குத் தோற்றிக் குதைந்தது ஐந்தாண்டு புகுமுக வகுப்பில் படித்து, ஈற்றில் ஏமாற்றத்தோடும் வெறுப்புணர்ச்சியோடும் மாணவர் வெளியுலகிற்கால்வைக்கின்றனர். பல்கலைக்கழகப் படிப்புக்குக் கருத்தோரைக் கல்லூரித்தலைவர்கள் ஏற்றமுறையிலே தெரிவுசெய்யாத காரணத்தினாலும், மாணவரை ஆண்டுதோறும் வகுப்பு ஏற்ற வேண்டுமென்ற கல்வி பீடத்தின் ஆணையினாலும் சிரேஷ்ட பாடசாலைக் கல்வி முடிந்து உயர்தர படிப்புக்கு வருவோரை அவரவர் ஆற்றலுக்கு ஏற்பப் பகுத்து அவரவர் தகுதிக்குரிய வழியிற் செலுத்தத் தவறுவதனாலும் இந்நிலை ஏற்படுகின்றது.

உயர்தர வகுப்பிலுள்ள மாணவரிற் பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதியில்லாதவர் தமது ஆற்றலுக்கு ஏற்ப அவ்வத்துறைகளில் கல்விகற்பதற்கு வழிவகுக்கப்படவில்லை. இக்குறை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். இக் கல்லூரியில் தொழில்முறைக் கல்விக்கும் வசதிகள் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் பல்கலைக்கழகக் கல்விக்கும் தொழில்முறைக் கல்விக்கும் ஓரேயளவு மதிப்புக் கொடாதவரையில் தொழில்முறைக்கல்வி வளராது. எனவே பல்கலைக்கழகப் புகுமுக மாணவரைத் தெரிவுசெய்வதிற் கவனம் செலுத்தி, அத்தகைய தகுதி இல்லாதோரின் கல்விக்குத் திட்டம் அமைத்து அக்கல்விக்கும் ஓரளவு மதிப்பைக் கொடுத்து அத்தகைய மாண

(6-ம் பக்கம் பார்க்க)

மகான் வாக்கு

ஒழுக்கும், விவேகமுமுள்ள ஜனநாயகம் உலகிலேயே மிகச் சிறந்த ஆட்சிமுறையாகும் ஆனால் குரோதமும், அறியாமையும், மூடநம்பிக்கையுமுள்ள ஒரு ஜனநாயகத்தால் பெரும் குழப்பமேற்பட்டு நாசத்தில் முடிவதாக இருக்கும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 2 உ. (3-4-65)

## கலக வதந்திகள்

மீண்டும் வகுப்புக்கலவரம் ஏற்படலாமென்ற வதந்திகள் தலைநகரில் அதிகரித்துள்ளனவாம் இதைக்கேட்டு தீவின் பலபகுதிகளிலும் பரவி வசிக்கும் தமிழ்மக்களுக்கு பீதி ஏற்படுவது இயற்கை.

1956-ம், 58-ம் வருடங்களில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களில் தமிழ்மக்கள் பட்டுள்ள இம்சைகளும் கஷ்ட நஷ்டங்களும்கொஞ்சமல்ல மீண்டும்கலவரம் ஏற்படுமாயின் அதுஅம்மக்களையே பெரிதும் பாதிப்பதாக இருக்கும்.

கலகக்காரர்கள்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிபர் உத்தரவிட்டுள்ளார், இதிலிருந்தே கலக வதந்திகளில் உண்மை இருக்கலாமென்று ஊகிக்க இடமேற்படுகின்றது. நிலைமையின் ஆபத்தை உணர்ந்து பொலிஸ் அதிபர் தக்கமுன் ஏற்பாடுகளைச் செய்வது வரவேற்கத்தக்கதே ஆனால் இவ்வித நிலைமைகளில் பொலிஸாரையும் இராணுவத்தையும் மட்டும் நம்பி இருக்கமுடியாது. பழைய அனுபவங்கள் இதற்குச் சான்று.

சென்ற முறை பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தம் கைவெழுத்தானதும், எதிர்ப்புக் கிளர்ச்சிகள் ஏற்பட்டு கலகத்தில் முடிந்தன, தமிழர்கள் தாக்கப்பட்டனர். அக்கலகத்தைப் பற்றி ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்திருப்பின், இதற்குக் காரணஸ்தர்களையும், அவ்வித கலகங்கள் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகளையும் அறிந்துகொண்டிருக்க முடியும். வேறு ஏதோ விஷயங்களுக்கெல்லாம் விசாரணை கமிஷன்களை நியமிக்கையில், இந்த தமிழ் சமூகத்தினரின் உயிர் போன்ற இவ்விஷயத்தில் விசாரணை நடத்தாதது பெரிய தவறாகும்,

எக்காரணம் பற்றியும் கலவரம் ஏற்படுவதானால் அதனால் அவதிப்படுபவர்கள் சிறுபான்மைச் சமூகத்தவரேயாவர். தமது கட்சியின் தேர்தல் தோல்விக்குத்தமிழரும் இந்தியரும் தான் காரணமென்று மந்திரி திசநாயக்கா ஸ்ரீமா ஒரு கூட்டத்தில் கூறினாராம். இது உண்மையாயின், அவரது இக்கூற்று தமிழர், இந்தியர் இவர்கள் மீது துவேஷமூட்டக்கூடியதுடன், அவர்களைத் தாக்கும்படி மறைமுகமாகத் தூண்டுவதுமாக முடியும். இதன் ஆபத்தை உணர்ந்திருந்தால், பொறுப்புவாய்ந்த அவர் இப்படிப் பேசியிருக்க முடியாது.

மீண்டும் வகுப்புக் கலகம் ஏற்படாமல் தடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு மட்டுமன்றி எதிர்க்கட்சிகளுக்குமுண்டு. தேர்தல் முடிந்தபின் சில இடங்களில் பலாத்கார சம்பவங்கள் ஏற்படுவதாகச்செய்திகள் கிடைக்கின்றன. இவற்றைத்தடுக்க இருதரப்பினரும் முயற்சி எடுக்கவேண்டும் இன்றேல் இக்கத்தீ வெங்கும் வகுப்புக் கலவரமாகப் பரவுவதுடன், நாம் பெற்ற சுதந்திரம் மக்களுக்கு நன்மையளிப்பதற்குப் பதில் ஒரு சாபத்தீடாகவே முடியும், நாம் ஜனநாயகத்துக்குத் தகுதியில்லாமல் போகவும் உலகிலே இலங்கையின் மதிப்பு மிகவும் குறைவதாக இருக்கும்.

இதைத்தடுக்கவும், தமிழரின் பீதியை நீக்கவும் இப்போது என்ன செய்யவேண்டுமென்பது மிக முக்கிய விஷயம் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த இவ்விஷயத்தில் பிரதமர், எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும், கூடுமானவரை பெறுவது நல்லது. எப்படியும், உணர்ச்சிகளைத் தூண்டும்படியான மொழிமூலிய பிரச்னைகளை கட்சிமுறையிலன்றி, தேசிய முறையில், வட்டமேஜை அல்லது அரசியல் நிர்ணய சபை மூலம் தீர்க்கவிட்டுவிடுமாறு தமிழ்த் தலைவர்கள் பிரதமருக்கு யோசனை கூறுவது பல விஷயங்களிலும் நல்லதாகும், விஷமிகள் எங்கே சந்தர்ப்பம் கிடைக்குமென்று காத்திருப்பார்களாதலால், அந்தச் சந்தர்ப்பத்தைக் கூடுமானவரை அளிக்காமல் இருப்பது நல்லதாகும்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்துக்கு டி எம். சௌந்தரராஜன் வருகிறார் என்று சில நாட்களுக்கு முன் சுவரொட்டிகளைப் பார்த்ததும் நம்ப முடியவில்லை, சென்ற சில வருடங்களாக நடந்த தர்பாரில், தமிழ்நாட்டில் இருந்து ஒரு பாடகரோ, பேச்சாளரோ இங்கு எட்டிப் பார்க்கவும் முடியுமா? வந்தபின்தான் நிச்சயமென்றிருந்தேன்.

அவர் இங்கு வந்து கச்சேரி செய்து நமது நிருபருக்கும் நல்ல பேட்டி அளித்ததைப் பார்த்த பின் தான், ஏதோ நல்ல காலம் உண்மையிலேயே பிறந்துள்ளதாகத் தோன்றியது.

யாத்திரைக்கட்டுப்பாடுகளை புதிய அரசாங்கம் கூடுமானவரை சீக்கிரத்தில் தளர்த்த போகிறதென்ற சந்தோஷச் செய்தியை கொழும்பில் கேள்விப்பட்டேன். இந்திய அரசாங்கமும் இலங்கையைப் பொறுத்தவரை செலாவணித் தடைகளை பரஸ்பர ஏற்பாட்டில் தளர்த்தி விடுமாயின், பல கலைஞர்களும், யாத்திரிகர்களும் முன்போல் போய்வரவும் இருதேச கலாசார உறவுகளும் பல படவும் கூடும்.

திரு டி. எம். சௌந்தரராஜனின் இந்த வரவு புதிய நம்பிக்கையை அளிப்பதாகவுள்ளது,

* * *

கொழும்பிலிருந்து ஓர் அன்பர் நீண்ட கடிதமொன்று எழுதியுள்ளார். அதில் குறிப்பிடுதப்பதாவது.-

இதுவரை என்றுமில்லாத ஒரு "கலை" தமிழருக்குப் பிறந்துள்ளது! இப்போ எங்கும் தமிழ் என்பதே பேச்சு! ஸ்ரீலங்கா கட்சி ஆதரவாளர்கள், அலுவலகங்களில், மட்டுமல்ல தொழிற்சாலைகளில், கடைகளில், தெருவில் சந்தியாயெல்லாம் தாம் சிங்களவராயிருந்தாலும் தமக்குள்ளே தமிழிலேயே பேசிக் கொள்கிறார்கள். தமக்குத் தெரிந்த தமிழில் "வாங்க ஐயா", "வணக்கம்". "எப்படி சொக்கம்", "நான் போறேன்" என்ற பேச்சுகளெல்லாம் தாராளமாகப் பேசப்படுகின்றன. ஆனால் கையுண்டித் தொனியுடன்!

கொழும்பிலுள்ள ஒரு தலைமை அலுவலகத்தில் ஒரு சிங்கள ஊழியர், தனித்தமிழில் தன லீவு விண்ணப்பத்தை எழுதிச் சமர்ப்பித்தார் சில இடங்களில் பண்டாரநாயக்கா, ஸ்ரீமாவோ ஆகியவரின் படங்களிருந்த இடத்தில், தந்தை செல்வநாயகம் இவர்களது படங்களை ஒட்டியுள்ளனர்,

இன்னும் சிலர், "அபே நாயக்கா செல்வநாயக்கா", 'அபே அகமதி செல்வா அகயது", "அபே சட்டன தெமல சட்டன" (எங்கள் தலைவர் செல்வநாயகம், எங்கள் பிரதமர் செல்வநாயகம், எங்கள் போராட்டம் தமிழ்ப் போராட்டம்) என்றும் கேலியாகப் பேசுகிறார்கள்.

இன்னும் சிலர் இனி தோசை இட்லி, மசாலவடை நிறையச் சாப்பிடலாமென்கின்றனர் "பொன்னம்பலத்துக்கு மந்திரி பதவி கொடுத்திருந்தாலும் பரவாயில்லை, செல்வநாயகம் கட்சிக்குக் கொடுத்தது தவறு, என்று பேசி, ஐ. தே. கட்சி ஆதரவாளரையும் திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்..." என்று எழுதி, புதிய கலவரத்துக்கு வித்திடப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தலைவர்களுக்கு இது அர்ப்பணமாகும். தமிழரைப் பாதுகாக்க அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

* * *

பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பலருள் பாமாலை பாடப் பயில்வித்தானை, எத்தேவும் ஏத்தும்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலம் தொடர்ச்சி)

இறைவன் தன்னை எம்மானை என்னுள்ளத்துள்ளே ஊறும், அந்தேனை அமுதத்தை ஆவின் பாலை அண்ணிக்கும் தீங்கரும்பை அரனை ஆதிப், புத்தேளைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

— அப்பர் அடிகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "வியட்னும் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண முயலுக"

## அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டனுக்கு 17 மண்டலசார்பற்றநாடுகள் மகஜர்

### நடுநிலைமை நாட்டு யோசனைக்கு வல்லரசுகள் வரவேற்பு

நியூயோர்க், ஏப்ரல் 2

இலங்கை, இந்தியா உட்பட 17 மண்டலசார்பற்ற நாடுகள் முன் நிபந்தனை எதுவுமின்றி வியட்னும் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக்காண முயலும்படி விண்ணப்பித்துக் கொண்டிருக்கின்றன. இந்த விண்ணப்பம் நேற்று ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டுக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் வழங்கப்பட்டன. பீகிங், ஹனோய், சைகோன், பாரிஸ் ஆகிய நகரங்களுக்கும் இது அனுப்பப்படவிருக்கிறது.

வியட்னுமில் அந்நியத் தலையீடு முடிவடைய வேண்டுமென்றும், அந்நியத் தலையீடுதான் தென்வியட்னுமில் ஒட்டுமொத்தத்தில் இருக்கிறது என்றும் இது பெரும் போராக மாறுமுன் அரசியல் தீர்வு ஒன்றுக்குப் பேச்சு துவங்குமாறும் சம்பந்தப்பட்ட நாடுகளை இந்த விண்ணப்பம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

வியட்னும் விஷயமாக தீர்வு காணத் தாம் முயற்சிசெய்து வருவதாய் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட யுதாண்ட கூறினர்.

**கோஸிஜின், ரஸ்க் வரவேற்பு**

மண்டலசார்பற்ற நாடுகளின் இந்த வேண்டுகோளைக் கவனமுடன் ஆராய்வதாக ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜின் கூறினர், விண்ணப்பத்தைத் தயாரித்த நாடுகளுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க், அமெரிக்கா இதுபற்றிக் கவனமாக ஆராயும் என்றார். அதேசமயம், வடவியட்னுமின் ஆக்கிரமிப்பு முடிந்தபின் அங்கு அமைதியைப் பராமரிப்பதே அமெரிக்காவின் கொள்கை என்றும் ரஸ்க் குறிப்பிட்டார்.

**ஜோன்ஸன் ஆலோசனை**

இதற்கிடையில் தென்வியட்னுமிலுள்ள தமது தூதர்ஜெனரல் டெய்லரின் யோசனைகள் பற்றி ஆராயுமுகமாக அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் இன்று தமது உயர் ஆலோசகர்களை ஒரு மகாநாட்டுக்கு அழைத்திருக்கிறர். இந்த மகாநாட்டில் டெய்லரும் பங்கு பற்றுகிறர்.

**50 வியட்காங்கியர் பலி**

நேற்று தென்வியட்னுமின் அமெரிக்க தளத்துக்கு 38 மைலுக்கப்பால் ஏற்பட்ட ஒரு கடும் சண்டையில் 50 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர். அரசாங்க தரப்பில் 9 பேர் மாண்டனர்; 66 பேர் காயமடைந்தனர் 20 பேரைக் காணவில்லை. வியட்காங் கெரில்லாக்கள் மற்றொரு அமெரிக்க ஹெலிகோப்டரைச் சுட்டுவீழ்த்தினர்.

**நேட்டோவில்**

பாரிஸில் நடைபெற்ற நேட்டோ சிரேஷ்ட சபைக் கூட்டத்தில் பேசிய அமெரிக்க உதவி ராஜாங்க மந்திரி திரு ஜார்ஜ்பால் பேச்சுவார்த்தைக்கான அறிகுறி எதையும் வடவியட்னும் இதுவரை காட்டவில்லை எனக் கூறினர்.

**காமன்ஸில் விவாதம்**

நேற்று லண்டன் காமன்ஸ் சபையில் வியட்னும்பற்றிய விவாதம் நடைபெற்றது பிரதமர் வில்ஸன் பேசியபோது அங்கு யுத்தத்தை முடிப்பது மிக அவசியமானது எனக் குறிப்பிட்டார். அமெரிக்காவின் வியட்னும் கொள்கைக்கு பிரிட்டன் ஆதரவளிப்பதாயும் அவர் கூறினர். தென்வியட்னும் மக்கள் பயங்கரம், படுகொலை, சப்வனில் ஆக்கிரமிப்பு ஆகியவற்றிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்றும் பிரதமர் கூறினர்.

**வாக்கர் போகிறர்**

முன்னுள் பிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு. கோல்டன் வாக்கர் விரைவில் வியட்னும் தீர்வுக்கான சாத்தியம்பற்றி ஆராய அங்கு போகிறர் என அறிவிக்கப்பட்டது.

## ஜெயின் கவர்னராவார்

புதுடில்லி, ஏப். 2

கேரள கவர்னராக திரு. ஏ. பி. ஜெயின் இன்னும் இரு வாரங்களில் பதவி ஏற்பார் எனத் தெரிகிறது.

திரு. கிரிக்குப்பதிலாக திரு ஏ. பி. ஜெயின் கேரள கவர்னராக நியமிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பதவியை ஏற்க திரு ஜெயின் தயங்கினர். அனல் அவரை இப்பதவியை ஏற்கும்படி பிரதமர் தூண்டியதாக அறியப்படுகிறது.

மாஜி மத்திய மந்திரியாக திரு. ஜெயின் லோகசபைக்கு ஹைதர் ராஜ்யத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2-ம் டெஸ்ட்

## வெற்றி தோல்வி இன்றி முடிந்தது

போர்ட் ஆப் ஸ்பெயின் ஏப்ரல் 2

இங்கு அவுஸ்திரேலியா வுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையே நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஸ்கோர் விபரம் வருமாறு:

**மேற்கிந்தியத்தீவுகள்**

முதல் இன்னிங்ஸில் 429 ரன்கள்.

2-ம் இன்னிங்ஸில் 386 ரன்கள்.

**ஆஸ்திரேலியா**

516 ரன்கள்.

(முதல் டெஸ்டில் மேற்கிந்தியத்தீவுகள் வெற்றி பெற்றது.)

## தப்பியோடிய "நரி" கைது

சென்னை, ஏப். 2

வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த நரி என்ற சுப்ரமணியம் ராயபுரம் அருகில் சென்று கொண்டிருந்த சாமான் ரயிலிலிருந்து சில இரும்புத் துண்டுகளைத் திருடியதற்காய் ரயில்வே பாதுகாப்பு படையினர் அவனைக் கைது செய்தனர். ஆனல் திடீரென ஒரு கும்பல் பாதுகாப்பு படையினர் மீது கற்களை வீச ஆரம்பிக்க, அப்போது ஏற்பட்ட அமளியில் [illegible] வண்ணாரப்பேட்டை போலீசார் பின்பு கைது செய்தனர்.

## ஹிந்தியில் அச்சடிக்கப்பட்ட ரயில் டிக்கெட்

### லோகசபையில் பரபரப்பு

புதுடில்லி, ஏப். 2

ஹிந்தியில், மட்டுமே அச்சடிக்கப்பட்ட ரயில்வே டிக்கெட் ஒன்று லோகசபையில் கணிசமான பரபரப்பை ஏற்படுத்தியது.

ஹிந்திபிரசாரம்சம்பந்தமான ஒரு கேள்வியின் போது ஆந்திராவைச் சேர்ந்த மிஸ் மேரி நாயுடு என்ற காங்கிரஸ் மெம்பர் இந்த டிக்கெட்டைச் சபையில் ஆஜர் செய்தார்.

ஹிந்தியை அமுல் நடத்துவதில் பொதுவான கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என தலைவர் கூறிக்கொண்டிருக்கும்போது இத்தகைய சம்பவங்கள் (ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் ஹிந்தியில் அச்சடித்த டிக்கெட்டுகளை விநியோகிப்பது) மக்களை, குறிப்பாக ஹிந்தியோ அல்லது ஆங்கிலமோ தெரியாதவர்களைப் பயமுறுத்தாதா என்று அவர் கேட்டார்.

இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்துவதற்காக டிக்கெட்டைத் தம்மிடம் தரும்படி அவரைப் பிரதம மந்திரி கேட்டார்.

அநேக மெம்பர்கள் கோபத்துடன் தங்களுடைய இருக்கைகளில் எழுந்து நின்று, அரசாங்கத்தின் கவனக்குறைவு பற்றி விசாரணை நடத்தவேண்டும் எனக் கூறினர்.

ஜனசங்க மெம்பர் திரு. அடல்பிகாரிவாஜ்பாயி இது கடுமையான விஷயம் என்றும் இதற்கு அரசாங்கம் விளக்கம் தரவேண்டும் என்றும் கோரினர்.

தாம் ஹிந்தியை ஆதரித்த போதிலும் ஜனவரி 26ம் திகதிக்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும் என அனைவருக்கும் தெரியுமாதலால் ஹிந்தி, ஆங்கிலம் இரண்டிலும் டிக்கெட்டுகள் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும் என அவர் கூறினர்.

இவ்விஷயம் பற்றித் தக்க விசாரணை நடத்தும்படி பிரதம மந்திரியை திரு. பூபேஷ் குப்தா கேட்டுக்கொண்டார்.

இவ்விஷயம் பற்றித் தாம் மிகவும் வருந்துபடுவதாக பிரதமமந்திரி கூறினர்.

"நான் ரயில்வே மந்திரியாக இருந்தபோது பிராந்திய மொழி, ஆங்கிலம், ஹிந்தி ஆகியவற்றில் டிக்கெட்டுகள் அச்சடிக்கப்பட வேண்டும் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இது எப்படி நடந்தது என எனக்குத் தெரியவில்லை. இவ்விஷயம் பற்றி நிச்சயமாக விசாரணை நடத்துவோம்" என்றும் பிரதமர் கூறினர்.

மிஸ் மேரிநாயுடு, டிக்கெட்டைப் பிரதம மந்திரியிடம் கொடுத்தார். இந்த டிக்கெட் 1965 மார்ச் 23 திகதியிடப்பட்டது.

## "புலிபசித்தாலும் புல்தின்னுது" சென்னை அசெம்பிளியில் தமாஷ்

சென்னை, ஏப். 2

சென்னை நிலவுடைமை சட்டத்தின் கீழ் இதுவரை எந்த நிலங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என உணவு மந்திரி திரு. ராமையா அசெம்பிளியில் கூறினர்.

சட்டம் நிறைவேறி மூன்றரை ஆண்டுகளாகியும் இன்னும் ஒரு ஏக்கர் நிலம்கூட மாற்றம் செய்யப்படவில்லை. இது புலியைப் பிடிக்கப் போய் எலியைப் பிடித்த கதையாய் இருக்கிறது" என்றார் திரு. கே. கிருஷ்ணமூர்த்தி.

"அப்படியல்ல இது உண்மையிலேயே புலி வேட்டைதான். லட்சியத்தை எய்திவிட முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு இருக்கிறது. இம்மாதிரி ஒரு முக்கியமான சட்டத்தை அமுல் நடத்தும் போது எல்லா விஷயங்களையும் தீரவிசாரித்து முறையாகத்தான் செயலாற்ற வேண்டியிருக்கிறது" என்றார் மந்திரி.

சிங்கம் வேட்டைக்குக் கிளம்பினால் யானையைத்தான் பிடிக்குமே ஒழிய சிறுமுயலைப் பிடிக்காது என்றார் திரு. தட்சணாமூர்த்தி கவுண்டர்.

"எந்த யானையைப் பிடிக்க வேண்டும் என்பது சிங்கத்துக்குத் தெரியும்" என்றார் மந்திரி.

சிங்கம், முயல் எதையுமே பிடிக்காமல் அரசாங்கம் திரும்பி வந்து விட்டால்..." என்று பலத்த சிரிப்புக்கிடையே ஒரு மெம்பர் கேட்டார்.

"முயலைப் பிடிப்பது இழுக்கு என்று சபாநாயகர் கூறியதும் சபையில் இன்னும்பலத்த சிரிப்பு எழுந்தது.

"அரசாங்கம் ஒரு பூனையை யாவது பிடிக்குமா," என்று கேட்டார் மதியழகர்.

"பூனையைப் பிடிக்க இந்தச் சட்டம் செய்யவில்லை" என்று மந்திரி கூறியதும், முதலமைச்சர் குறுக்கிட்டு, புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது என்று விஷயத்தை ஹாஸ்யச் சுவையோடு முடித்தார்.

## ஹிந்தி விலாசமிடப்பட்ட இரண்டு பார்சல்கள்

### கல்கத்தாவிலிருந்து திரும்பின

புதுடில்லி, ஏப்ரல் 2

ஹிந்தியில் விலாசமிடப்பட்ட இரண்டு புத்தகப் பார்சல்களை கல்கத்தாவில் எவராலும் படிக்கமுடியவில்லையாதலால் அங்கிருந்து அவை திரும்பி அனுப்பப்பட்டன.

உதவி தகவல் மந்திரி திரு டி. பகவதி இத்தகவலை லோகசபையில் வெளியிட்டார். அலகாபாத்தில் அச்சடிக்கப்பட்ட ஒரு சஞ்சிகையின் பிரதிகள் இந்த பார்சல்களில் இருந்தன. அலகாபாத் வழியர்களை மந்திரி கண்டித்தார். "அவர்கள் அந்த விஷயத்தை ஆங்கிலத்தில் எழுதியிருக்க வேண்டும். கல்கத்தாவில் உள்ளவர்கள் ஏன் இந்த விசயத்தை ஆங்கிலத்தில் எழுதவில்லை என்பது பற்றி இலாகா விசாரிக்கும்" என்றார் மந்திரி.

"இம்மாதிரி ஒரு சம்பவம் தான் நடந்துள்ளது: சென்னை ராஜ்யத்தில் எதுவும் நடக்கவில்லை" என்றும் அவர் கூறினர்.

"பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட விலாசங்கள் அது போய்ச் சேரும் இடங்களில் புரிந்துகொள்ளப்படாவிட்டால் ஆங்கிலத்திலும் எழுத ஏற்கனவே ஏற்பாடுகள் உள்ளன" என மந்திரி சத்யநாராயணசின்ஹா கூறினர்.

## உரிய தருணத்தில் சீனுவுக்கு செல்வேன்

### சூ அழைப்புக்கு ஷேக் பதில்

அல்ஜியர்ஸ், ஏப். 2

சீனப் பிரதமர் சூ-என்-லாய் தம்மை சீனுவுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருப்பதாயும், விரைவில் உரியசமயத்தில் தாம் அங்கு விஜயம்செய்யப் போவதாயும் ஷேக் அப்துல்லா இங்கு கூறினர்.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணயஉரிமை சம்பந்தமாக தமது கொள்கையை சீனப் பிரதமர் ஆதரித்ததாயும், இதற்காகத் தாம் அவருக்கு நன்றி தெரிவித்ததாயும் அப்துல்லா அறிவித்தார்.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணயத்தை சீன எப்போதுமே ஆதரித்துவந்திருப்பதாயும் அப்துல்லா பாராட்டுத் தெரிவித்தார்.

நேற்று டில்லி லோகசபையில் திரு. ஹேம்பருவா பேசுகையில் சீனுவும், பாகிஸ்தானும் ஒன்றுசேர்ந்து காஷ்மீரைத் தாக்க முயலக்கூடும் என்றும், சீனுவிலுள்ள இந்தியாவின் மாகாணத்தில் காஷ்மீர் அரசாங்கம் ஒன்றை நிறுவ ஷேக்அப்துல்லாவுக்கு சீன அனுமதி வழங்கக்கூடும் என்றும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஞ்சஊழல் மசோதா விரைவில் வரும்

கொழும்பு, வெள்ளி

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான மசோதாவை விரைவில் பார்லிமெண்டில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மசோதாவுக்கு முக்கியத்துவமளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த மசோதா சம்பந்தமாக பிரதமர் திரு டட்லி சேனநாயகா, அட்டர்னி ஜெனரல் இலாகாவைச் சேர்ந்த சில அதிகாரிகளுடன் தமது வாசஸ்தலத்தில் ஆலோசனை நடத்தினார்.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் மீது குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு அரசியல் உரிமைகளை ரத்துச்செய்வதுட்பட பல கடும் சட்டவிதிகள் இந்த மசோதாவில் இடம் பெறுமெனத் தெரிகிறது.

காதிககோடு மசோதா பார்லிமெண்டில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டபின் கொண்டுவரப் படவிருக்கும் லஞ்ச ஊழல் மசோதாவுக்கு மேலும் பல திருத்தங்கள் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கபடுகிறது.

—

## வாக்குமூலம் அவசியம்

கொழும்பு, வெள்ளி

பிரசவத்திற்குமுன் ஆஸ்பத்திரியிலிருந்து செல்லும் தாய்மார்களிடமிருந்து எழுத்து மூலம் வாக்குமூலம்பெற வேண்டும் என்று சுகாதார சேவை அதிகாரி டாக்டர் வி. ரி. ஹெரசகுணரத்ன எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு

## மின்சாரவிநியோகம் கொடுக்கப்படுமா?

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஸ்தலஸ்தாபன மந்திரி காரியாலயத்தினரால் தயாரிக்கப்பட்ட திட்டமொன்றின்படி மின்சாரவிநியோகம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படவிருக்கின்றது.

தற்பொழுது வீட்டிலுள்ள தேவைகளுக்கு மாத்திரம் உள்ளூராட்சி மன்றங்கள் மின்சாரம் விநியோகம்செய்கின்றது. ஆனால் தற்பொழுது தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி உள்ளூராட்சி மன்றங்கள் கமத்தொழில் கைத்தொழில் நோக்குகளுக்காகவும் மின்சாரம் விநியோகம் செய்யலாமெனவும் தெரியவருகிறது.

—

## உள்ளூர் ஆட்சி மன்ற தேர்தல்கள்

கொழும்பு வெள்ளி

அடுத்த வருடத்திற்கு பின்போடப்பட்ட 80 உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை 65-ம் ஆண்டு ஜனவரி 81-ம் திகதிக்கு முன் நடைபெறுமென்று தெரிய வருகிறது.


இவ்வருடம் ஜூன் மாதம் 80-ம் திகதி நடைபெறவிருந்த இத்தேர்தல்கள் பொதுத்தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டது.

பிரசவத்திற்குமுன் தங்களை வெளியேற்றுவதாக பொது மக்கள் செய்த புகாரைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.


தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

## சவரின் வளையல்கள்

..ந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்க நகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவ அமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ருபா 6-00

M 42 ஜோடி ரூ 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ 15-00 M 29 ஜோடி ரூ. 15-07
M 47 ஜோடி ரூ 18-50

## ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி

12, பட்டிநுவர வீதி, கண்டி.


## "ஒற்றுமையே சிறந்தது"

கிளிநொச்சி, வெள்ளி

"நாட்டில் ஒற்றுமையே சாதனம். சண்டை பூசல்கள் நிறைந்த என்ற பேச்சில்லாமல் ஒற்றுமையாக வாழவேண்டும். அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் தொண்டு. நான் எவ்வளவு உதவி செய்ய முடியுமோ கிராமமக்களுக்கு அவற்றைச் செய்வேன். என்னை எந்த நேரமும் நேரடியாக கலந்து சந்திக்கலாம்". இவ்வாறு கிளிநொச்சி எம். பி பண்டிதர் க. பொ. இரத்தினம் தருமபுரம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மைதானத்தில் திரு வே. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பேசும்பொழுது கூறினார்.

தருமபுரம் கிராமசபை அங்கத்தவர் திரு. சோமசுந்தரம் நாட்டின் தேவைகளைக் கொண்ட அறிக்கை ஒன்றும் சமர்ப்பித்தார். செல்வி மு. சிவஞானவதி, திரு. மு. பரம்சோதி, திரு. இ. இராமச்சந்திரன், திரு. க. சங்கரப்பிள்ளை திரு. சற்குணம் உட்பட மற்றும் பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

—

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் திரு. ஈ. ஈஸ்வரபாதம் இம்மாதம் முதல் சப் இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

—

## 39-வது ஆண்டு விழா

கண்டி, வெள்ளி

மத்திய மாகாண சைவ மகா சபையின் 39-வது ஆண்டு நிறைவுவிழா ஏப்ரல் 9-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கண்டி சைவமகா சபை மண்டபத்தில் நடைபெறும்.

அக்கூட்டத்தில் புதுவருடத்துக்குரிய சபை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவார்கள், ஆண்டு நிறைவு விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக வித்துவான் க. ந. வேலனின் விரிவுரை இடம்பெறும்.

—

## மந்திரிக்கு நல்லாசி

சங்கானை, வெள்ளி

ஸ்தலஸ்தாபன மந்திரியாக திரு. எம். திருச்செல்வம் தெரிவு செய்யப்பட்டதை யிட்டு சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு. சி. அம்பலவாணர் நல்லாசி தெரிவித்து செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

—

## காஞ்சிகுரு-யு.எஸ். தூதர் சந்திப்பு

சென்னை, ஏப்ரல் 2

மைலாப்பூர் சமஸ்கிருதக் கல்லூரியில் அமெரிக்க கான்சல் ஜெனரல் டாக்டர் பிராங்கிளினுக்கு காஞ்சி காமகோடி ஜகத்குரு சங்கராச்சாரியார் பேட்டியளித்தார். ஜகத்குருவை டாக்டர் பிரங்கிளின் சந்திப்பது இது இரண்டாவது தடவையாகும். ஜகத்குருவுக்கு வந்தனம் செலுத்திவிட்டு அவருடைய உடல்நிலையைப் பற்றி டாக்டர் பிரங்கின் விசாரித்தார். வசந்த நவராத்திரியின மகிமையை ஜகத்குரு அவருக்கு விளக்கினார். பேட்டி 20 நிமிஷம் நீடித்தது.

—

## பாரிசில் வில்சன்

லண்டன், ஏப்ரல் 2

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் இன்று காலை பாரிஸுக்குப் புறப்பட்டார் ... பேச்சு நடத்துவார்.

# அரசாங்க ஊழியரின் அரசியல் நடவடிக்கைகள்

## விசாரணை செய்ய ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் அரசியல் நடவடிக்கைகளில் வெளிவெளியாகப் பங்குகொண்ட சில அரசாங்க ஊழியர்களினதும் கூட்டுஸ்தாபன ஊழியர்களினதும் நடவடிக்கைபற்றி விசாரணைசெய்வது பற்றி அரசாங்கம் பரிசீலனைசெய்துவருகிறது.

ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள். இ. போ. சபை கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபன ஊழியர்கள் பலர் அரசியல்நடவடிக்கைகளில் பகிரங்கமாக ஈடுபட்டதாக அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

எந்தக் கட்சிக்கு ஆதரவாக இருப்பினும் ஆசிரியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுபற்றி கவனிக்கப்படவேண்டும் என்று கல்வி மந்திரி ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார்.

—

## இ. தொ. கா. கிளைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைதொழிலாளர் காங்கிரஸ் கிளைகளை விரைவில் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் ஆரம்பிக்க தலைமை பீடம் ஆலோசனை செய்து வருகிறது.

—

## ராதாகிருஷ்ணன் குணமடைகிறார்

லண்டன், ஏப்ரல் 2

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு வெற்றிகரமான முறையில் கண் ஆப்ரேஷன் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நாளை அவர் வைத்திய விடுதியிலிருந்து வெளியேறவிருக்கிறார், எனினும் அவர் தொடர்ந்து சில நாட்கள் டாக்டர்களின் மேற்பார்வையில் இருந்துவருவார். சத்திரசிகிச்சைக்குப்பின் டாக்டர் ராதாகிருஷ்ணன் உற்சாகத்துடன் இருந்துவருகிறார் என அறிவிக்கப்பட்டது.

—

## சென்னை மேயருக்கு ரூ 60000 கார்

சென்னை, ஏப்ரல் 2

சென்னை மேயருக்கு ரூபா 60000 விலையுள்ள ஒரு கார் தரப்படும். ரூபா 20000 மதிப்புள்ள கார் போதும் என்று கூறும் திருத்தம் ஒன்றை இரு அங்கத்தினர்கள் கொணடுவந்தார்கள். ஆனால் உயர் அந்தஸ்தைக் கொண்டிருப்பது மேயர்கள் மரபு என்றும், ஆகவே அவ்வித கார் அவசியமென்றும் மேயர் சுட்டிக்காட்டினார்.

—

## சுவரண்சிங்

புதுடில்லி, ஏப்ரல் 2

பாகிஸ்தானுடனை வேற்றுமைகளைத் தீர்க்க வாய்ப்பு எதுவுமில்லையென்றும், இதுவரை இந்தியா அதற்காக முயற்சித்தும் எவ்வித பலனும இல்லையென்றும் வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவரண்சிங் கூறினார். இந்தியா மீது அது எல்லும் பகைமை நோக்குகொண்டிருப்பதும், சீனவுடன் சேர்ந்துகொண்டிருப்பதுமே இதற்கும் காரணம் என்றும் அவர் கூறினார்.

—

## கராச்சியில் சீனப் பிரதமர்

கராச்சி, ஏப்ரல் 2

இன்று கராச்சி வந்த சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் பேச்சு நடத்தினார். நாளை திரு. சூ டாக்கா வழியாக பீகிங் பயணமாவார்.

## சாஸ்திரிக்கு டட்லி நன்றி

புதுடில்லி, ஏப்ரல் 2

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி தாம் பதவி ஏற்றது குறித்து அனுப்பிய வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். அடுத்து லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் திரு. சாஸ்திரியைச் சந்திக்க ஆவல்கொண்டிருப்பதாயும் தமது செய்தியில் அவர் கூறியிருக்கிறார்.

—

## அயூப் எச்சரிக்கை

கராச்சி, ஏப்ரல் 2

காஷ்மீரில் நூற்றுக்கணக்கான விடுதலை இயக்கத்தலைவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும், அவர்களைச்சிறைவைப்பதன் மூலம் மக்களின் சுயநிர்ணயத்தை அடக்கிவிட முடியாது என்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

—

## முன்னாள் உதவி பிரதமர் கோலை

ஏடன், ஏப்ரல் 2

முன்னாள் ஏமன் உதவிப் பிரதமர் ஷேக் முகம்மது அல் சுபாரி நேற்று படுகொலை செய்யப்பட்டார்.

—

## கிரி மைசூர் கவர்னரானார்

பங்களூர், ஏப்ரல் 2

கேரள கவர்னராயிருந்த திரு வி. வி. கிரி இன்று மாலை மைசூர் கவர்னராகப் பதவி ஏற்றார். இதுவரை மைசூர் கவர்னராய் இருந்த ஜெனரல் ஸ்ரீ நாகேஷ் நேற்று பதவி முடிந்தபின் டில்லி புறப்பட்டார்.

—

## அஸ்ஸாமில் அறுவர் பலி

புதுடில்லி, ஏப்ரல் 2

அஸ்ஸாமில் நேற்று வீசிய கடும் புயல் காரணமாக 6 பேர் கொல்லப்பட்டனர்.

—

## பொலிஸ் அதிகாரிகளுக்கு லீவு ரத்து

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஏப்ரல் 18-ந் திகதிவரையும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு லீவு வழங்கப்படமாட்டாதென்று தெரியவருகிறது. இதற்கான கட்டளை பொலிஸ் அதிகாரி திரு. எஸ். ஏ. திஸாநாயகாவினால் எல்லா அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மார்க்ஸிய வாதிகள் தொடர்பான ஒரு வேலைநிறுத்தத்தை ஏற்படுத்தி தேசிய அரசாங்கத்தை கஷ்டத்திற்குள்ளாக்கவிருக்கிறார்கள் என்ற திட்டத்தை அறிந்தே பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

தேவையேற்பட்டால் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம் என்ற கட்டளையும் எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாம். மார்க்ஸிய வாதிகளின் திட்டப்படி முதலில் கொழும்பில் கலவரத்தை ஏற்படுத்தி பின்னர் மாகாணங்களுக்குப் பரவவிட்டு தேசிய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக வழிவகுத்துள்ளார்கள் என்று பொலிஸ் அதிகாரிகள் மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்கள் என்றும் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இசை இருக்கும் வரை இசைமன்னன் பெயர் வாழும்"

## சௌந்தராஜனுக்கு உடுப்பிட்டி எம். பி. புகழ்மாலை

பருத்தித்துறை, வெள்ளி. "இசையிருக்கும்வரை இசை மன்னன் டி. எம். சவுந்தரராஜன் பெயர் வாழும்- என உடுப்பிட்டி எம். பி திரு. மு. சிவசிதம்பரம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இசை மன்னன் டி. எம். சவுந்தரராஜனினது இன்னிசைக் கச்சேரியின்போது அவரைப் பாராட்டிப் பேசுகையில் கூறினர்.

பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலய கோபுர நிதிக்காக நடைபெற்ற இக்கச்சேரியில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

ஆலயங்கள் இசை முதலான கலைகளை வளர்க்கும் இடங்களாக முன்பு இருந்துவந்த நிலை மாறி இசையின் உதவியால் அவை வளரவேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது. இரு ஆலயங்களுக்கு நிதி உதவு மூகமாக கச்சேரி செய்ய தாய்நாட்டில் இருந்துவந்த இசை மன்னரை தமிழ் பேசும் மக்கள் சார்பில் பாராட்டுவதில் பெருமை அடைகின்றேன்.

தாய்நாட்டையும் சேய்நாட்டையும் இரும்புத்திரை போட்டு தடை செய்தாலும் எமது பண்பு, கலாச்சாரம் ஆகியவற்றை அழித்தோ அல்லது எமது உறவைச் சிதைத்தோ விட முடியாது.

அரசாங்கம் தடைவிதித்தாலும் இசைமன்னன் போன்றோரின் இசைவிருந்தை நாம் இங்கிருந்தே அனுபவித்துவிட முடியும்.

இசைமன்னர் போன்றோரின் வருகை நம் நாட்டில் இசை வளர உதவுவதுடன் மீண்டும் மீண்டும் வர் வரும் அளவுக்கு ஆர்வத்தையும் அளிக்கவேண்டும்.

எழுத்தறிஞர் திரு. ஆர். சிவபாதசுந்தரம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்ததுடன் திரு. சவுந்தரராஜன் கோஷ்டியினரை மணமாலை சூட்டி வரவேற்ஞர்.

சுமார் நான்கு மணி நேரம் நடைபெற்ற இன்னிசைக் கச்சேரியில் திரு. சவுந்தரராஜன் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல சினிமாக்களில் பாடிய பல பாடல்களைப் பாடி மகிழ்வித்தார்.

முருகப் பெருமான் பெயரில் பாடிய பல பாடல்கள் ரசிகப் பெருமக்களைப் பக்திபரவசப் படுத்தியது.

REGAL — JAFFNA
NOW SHOWING
VINCENT PRICE
IN
TOWER OF LONDON

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 3-4-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7 00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசுற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவசுற்சிந்தனை, 7-00 பக்திப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை 7-00 சங்கீதநாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 பேச்சு, 8-30 இஸ்லாமியகீதங்கள், 8-45 ஹிந்துஸ்தானி கீதங்கள். 9-15 பேச்சு, 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 4-4-65

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசுற்சிந்தனை, 6 55 கிறிஸ்தவசுற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7 30 மெல்லிசை, 7-45 சங்கீதபாடம், 8-15 தமிழ் முழக்கம், 8-30 ஞானஞ்சலி, 9-00 மூலிம்பாடசாலை, 9-30 திரைகானம், 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வாய்ப்பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 நேயர்கடிதங்கள், 7-00 வாய்ப்பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 8-15 மாணவர்மன்றம், 8-30 நேயர்விருப்பம், 9-15 மணியனகு, 9-45 மங்கையர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

கெப்பிட்டல்
(கொட்டாஞ்சேனை)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பானுமதி — பத்மினி
(மற்றும் பலர் நடித்த)

ராஜா தேசிங்கு

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள CY 8288 இலக்கமுடைய மொறிஸ் 8 கார் விற்பனைக்கு இருக்கிறது. கன்னிபங்காட்டிலுள்ள பென்னின்ஸ்சுலா மோட்டோர் கராச்சில் பார்வையிடலாம். 1

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-5 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்த கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

### மாணவர் தேர்ச்சி அறிக்கை

தவணைப் பரீட்சை மாணவர் தேர்ச்சி அறிக்கைப் பத்திரம் தடித்த அட்டை 100க்கு ரூ 10. பாடசாலைப் பெயர் அச்சிட ரூ 12-50 வீதம் முற்பணம் அனுப்பி விண்ணப்பிக்குக. பார்சலில் அனுப்புவோம். கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1840

### வகுப்புகள்

பி. ஏ., ஜி. ஏ. கியூ., ஜி. சி. இ., உயர்தரம் கலை, விஞ்ஞானம்; ஜி. சி. இ. சாதாரணம், கலை, விஞ்ஞானம், வர்த்தகம்; ஜி. சி. இ. முதல் வருடம்; விஞ்ஞானம்; ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம்; சிங்களம்; விசேஷ மாலை வகுப்புகள் - ஆங்கிலம், அட்சரகேத்திரகணிதம், பௌதீகம், இரசாயனம், உயிரியல், தமிழ் சரித்திரம், பூமிசாஸ்திரம், அரசியல் முதலிய வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யுனைட்டெட் இன்ஸ்ரியூட், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1837

### கல்வி

பெண்கள் மட்டும். தட்டெழுத்து சுருக்கெழுத்து தமிழில் ஆங்கிலத்தில் சிங்களம், ஆங்கிலம், கணக்குப் பதிவியல். ஜி. சி. இ. சாதாரணம் கலை, விஞ்ஞானம், வர்த்தகம். மேல்தரம். எழுதுவினைஞர் பரீட்சை, தையல். காலை, மாலை வகுப்புகள். யாழ் கல்லூரி, பெண்கள் கிளை, 29, பருத்தித்துறை ரோடு, யாழ்ப்பாணம். 1845

ஜி. சி. இ. விஞ்ஞானம் கலை, வர்த்தகம். சிங்களம் கணக்கு, ஆங்கிலம், Maths Applied Maths. காலை, மாலை வகுப்புகள். யாழ் கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 1844

### விற்பனைக்கு

பரந்தன் நாலாம் வாய்க்காலடியில் தற்போது கமம்செய்யும் தாமோதரம் வயலெனப்படும் திறமான நெற்காணி 19 1/2 ஏக்கர் விற்பனவு விபரங்கள் அறிவது பிறக்கிராசியார் த சங்கரப்பிள்ளை 202, காவலர் ரோட், யாழ்ப்பாணம். 1831

### மரண அறிவித்தல்

யாழ். அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் திரு. கே. இராசமணி என்பவரின் தாயாரான திருமதி இராசம்மா என்பவர் 1-4-65 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 2-4-65 நண்பகல் [illegible] மயானத்தில் நடைபெற்றன. 5

## கேள்வி விளம்பரம்

1. ஒப்பந்த வேலை: புத்தூர் வேலகணட்டித்தெரு அமைத்தல்.
2. கேள்விப் பத்திரம்:
   (I) கொடுத்தல் 15-4-65, பி. ப, 2 மணி வரை-
   (II) ஏற்றல் 17-4-65, மு. ப. 9 மணி வரை.
3. தகுதி:
   (I) பத்தாயிரம் ரூபா பதிவு ஒப்பந்தகாரர்கள்,
   (II) கேள்விப் பத்திரப் பணம் ரூ. 50/-
   (III) பத்ரேக் கட்டுப்பணம் ரூ. 05/-
4. விபரம் அறிதல்:
   (I) வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் அலுவலகம்.
   (II) புத்தூர் கிராம சபை அலுவலகம்.

சி. நடராசா,
தலைவர், கி. ச. புத்தூர்.
1-4-65. 105

## திருமண அழைப்பு

சிவபாதசுந்தரம்

சுந்தரகலாவல்லி

திரு. க. செல்லையாவின் (மனேச்சர், மீசாலை வடக்கு ப. நோ. கூ. ச) மகன் திரு சிவபாதசுந்தரம் (உதவி தபால் அதிபர், பளை) அவர்களுக்கும், திரு. பே. செல்லையாவின் (இளைப்பாறிய தபாலதிபர், கொடிகாமம்) மகள் செல்வி சுந்தரகலாவல்லி (ஆசிரியை பரி. யோவான் பாடசாலை, நகுவானை) அவர்களுக்கும் எதிர்வரும் பங்குனித் திங்கள் 25-ம் நாள் புதன்கிழமை (7-4-65) காலை 10-25 ல் வரும் சுப முகூர்த்தத்தில் திருமணவைபவம் மணமகளில்லத்தில் நடைபெறும். உற்றார் நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 4

## "கச்சான் பயிர்ச் செய்கை பயன் தரும்"

சுழிபுரம், வெள்ளி. "எமது நாடு ஓர் விவசாய நாடாக பெயரளவில் மட்டும் இல்லாமல் செயலளவில் இருக்கவேண்டும். இளம் கமக்காரர்கள் மட்டுமே செயலளவில் அதிகம் காரியங்களைச் செய்யலாம். பிற நாட்டவர்களுடைய யுத்திமதிகளையும் அவர்களுடைய செயல்களையும் நாம் பின்பற்றவேண்டும். அப்படிச் செய்வோமானுல் நாம் எமது உணவுப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளலாம்" என்று வலிமேற்கு விவசாய போதனு ஆசிரியர் திரு. எம். நடராசா பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வீதியில் இளம் விவசாயிகளுக்கான திரைப்படக் காட்சியின்போது குறிப்பிட்டார். "வலி மேற்கில் உள்ள கமக்காரர்கள் கச்சான் பயிர்ச் செய்கையில் அதிகம் கவனம் செலுத்தினுல் மிகுந்த லாபத்தை அடையலாம், வீட்டுத் தோட்டச் செய்கைகள் மூலம், உணவுத் தட்டுப்பாட்டைப் போக்கலாம், நல்லினப் பசுக்களை வளர்ப்பதால் சத்துள்ள பாலைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் சொன்னுர்.

### குத்தகைக்கு

தொழில் வட்டார சூழலில் நீடித்த தவணைக் குத்தகைக்கு 5 பரப்பு தெரு புறக்காணி உண்டு. இக்காணி யாழ்ப்பாணம் பட்டினத்திற்குச் சிட்டலாவி வீதியில் இருக்கின்றது. மூலதனமுள்ளவர்கள், வர்த்தக தொழில் முயற்சியுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். எஸ் நாசிக்கம், டைரக்டர், சிக்கே ஸ்னே இண்டஸ்ரீஸ் அண்ட் டிஸ்ரிபியூட்டர்ஸ், தொல்புரம், சுழிபுரம். 188



சுதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே! இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-88.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரோடு,

கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்காங்கிரஸ் மகாநாடு மே மாதம் நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

தமிழ் காங்கிரஸ் கட்சியின் வருடாந்த மகாநாட்டை மே மாதம் பத்தாம், பதினேழாம் திகதிகளில் நடத்துவதென யாழ்ப்பாணம் உயர் நிலைக்கல்லூரியில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் காரியகமிட்டி கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 24 தேர்தல் தொகுதிகளிலும் காங்கிரஸ் கிளைகளை உடனடியாக ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அத்துடன் ஒவ்வொரு கிராமங்களிலும் வாலிப முன்னணி, மாதர் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவுனியா எம். பி. திரு டி. சிவசிதம்பரம் ஆகியோரும் பங்குபற்றினர்கள்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது, மிகவும் நெருக்கடி ஏற்பட்டுள்ள இக்த நேரத்தில் தமிழ் மக்கள் ஒற்றுமைபட்டு இருக்கவேண்டுமென்றும் இழந்த உரிமையைப் பெறுவதற்குக் வேற்றுமைகளை மறந்து, தமிழ் மக்கள் ஒன்று சேர வேண்டுமென்றும் கூறினார்.

தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயல் கமிட்டி கூட்டம் நின்று இல் யாழ்ப்பாணம் உடுவில் பாடசாலையில் திரு ஜி ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். பல முக்கிய விஷயங்கள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படுமென்றும் அறிவிப்படுகிறது.

## தமிழரசுக்கு . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படும். இதுபோன்ற திருத்தப்பிரேரணை கொண்டுவரப்படுமாயின் அதன் நோக்கம் தமிழரசுக்கட்சியினருக்கும் பார்லிமெண்டிலுள்ள இதர தமிழ்பேசும் எம். பி. க்களுக்கும் 'சங்கடமான' நிலையை ஏற்படுத்துவதுதான் என்று அரசியல்வட்டாரங்கள் கருதுகின்றன.

## நன்றியறிவித்தல்

வாக்காளப்

பெருமக்களே!



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நல்லூர் தொகுதி பிரதிநிதியாக என்னை ஆதரித்து தெரிவு செய்த உங்களனைவருக்கும் எனது இதயம் நிறைந்த நன்றியை என் சார்பிலும், கட்சியின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தாங்கள் தன்னினத்துக்குச் செய்யவேண்டிய ஓர் கடமையாக, உணர்ச்சியோடு இத் தொகுதியின் தேர்தல் வேலைகளைச் சிறப்பாக முன்னின்று நடாத்திய பெரியோர்கள், தாய்மார்கள், வாலிபர்கள், கன்னியர்கள், இளைஞர்கள், அனைவர்க்கும் எனது நன்றியை மீண்டும் அறிவித்துக்கொள்கின்றேன்.

இ. மு. வி. நாகநாதன்,
பாராளுமன்ற உறுப்பினர்.
20, கல்லூரி வீதி,
நாவியடி, நல்லூர். 104

## ஆஸ்பத்திரியின் சீர்கேடு
### ஜி. ஜி. அக்கறை

யாழ்ப்பாணம், வெள்ளி

தேசிய அரசாங்கத்தில் சுகாதார மந்திரிப்பதவியை ஏற்க மறுத்தபோதிலும், யாழ்ப்பாண எம். பி. என்ற கோதாவில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தார்.

ஆஸ்பத்திரியிலுள்ள வார்டுகளையும் சத்திர சிகிச்சை அறைகளையும் பார்வையிட்ட திரு. பொன்னம்பலம், அங்குள்ள சீர்கேடுகளை நிவிர்த்தி செய்ய விரைவில் முயற்சி எடுக்கப்போவதாகத் தெரிவித்தார்.

டாக்டர்களுடனும், ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்களுடனும் கலந்து பேசிய பின், யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தப் போவதாகவும் அவர் கூறினார்.

## கல்வி . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வரையும் வழிப்படுத்தினாலன்றி புதுமுகவகுப்பில் வீண் அழிவு ஏற்படாதிருக்கும். கல்லூரி உயர்தரப் படிப்பு பல்கலைக்கழகத்திற் புகுவதற்கும் அரசாங்கப் பதவி வகிப்பதற்கும் துறைவுச்சீட்டு என்ற நிலைமை மாறவேண்டும்"

செல்வி மித்திராசேன் துரைரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. ஜே. சி. தம்பிரத்தினம் நன்றியுரை கூறினார். கல்லூரி மத்திய வகுப்பு மாணவிகளின் நடனமும், மேல்வகுப்பு மாணவர்களின் ஆங்கில நாடகமும், மருடபக்கம் என்ற தமிழ் நாடகமும் விழாவில் இடம் பெற்றன.

## சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மகாநாடு

சிதம்பரம், ஏப்ரல் 2

மலாயா சர்வகலாசாலையும், சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கமும் நடத்தும் சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்க மகாநாட்டின் கருத்தரங்கு மலாயா பல்கலைக்கழகத்தில் 1966 ஏப்ரல் 17 முதல் 23-ம் திகதி வரை நடைபெறும். மகாநாட்டின் பல்வேறு அம்சங்களைக் கவனிக்க ஸ்ரீ தத்தோ வி. டி. சம்பந்தம் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

கிரிக்கெட்

## சென். ஜோன்ஸ் ரோயல்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு ரோயல்கல்லூரிக்குமிடையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று பி. ப. 12 மணிக்கு ஆரம்பமான கிரிக்கெட் போட்டியின் ஸ்கோர் விபரம் வருமாறு:—

**ரோயல்**

முதல் இன்னிங்ஸ் 156 ரன்கள்.

**சென். ஜோன்ஸ்**

முதல் இன்னிங்ஸில் ஆட்ட இறுதிவரை 5 விக்கெட்டுகள் இழந்துக்கு 146 ரன்களை எடுத்தது. ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறும்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று வியாழக்கிழமை இழுக்கப்பட்ட தேசிய சுவீப்பில் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் டிக்கட்டுகள் வருமாறு. இவை உறுதிப் படுத்தப்படவேண்டும்

முதற் பரிசு
08 J 0088—ரு. 80,74[illegible]

இரண்டாம் பரிசு
09 F 0191—ரு. 12,[illegible]96

மூன்றும் பரிசு
04 F 0517—ரு. 8,074

தலா 168-70 பெறும் 100 டிக்கட்டுகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06 | J | 0348 | 06 | V | 0650 | 12 | M | 0232 |
| 06 | O | 0217 | 07 | K | 0452 | 05 | V | 0137 |
| 10 | V | 0931 | 03 | A | 0846 | 04 | Y | 0960 |
| 08 | M | 0271 | 13 | M | 0375 | 08 | M | 0917 |
| 04 | S | 0831 | 08 | U | 0552 | 12 | Y | 0388 |
| 01 | X | 0355 | 02 | O | 0189 | 08 | G | 0975 |
| 13 | N | 0261 | 02 | Y | 0098 | 05 | E | 0937 |
| 06 | V | 0922 | 02 | B | 0389 | 10 | M | 0497 |
| 09 | C | 0311 | 02 | Y | 0970 | 01 | H | 0721 |
| 10 | A | 0595 | 07 | K | 0837 | 08 | G | 0930 |
| 01 | D | 0522 | 01 | J | 0252 | 09 | X | 0843 |
| 08 | P | 0882 | 02 | G | 0077 | 01 | Z | 0475 |
| 10 | X | 0456 | 06 | N | 0587 | 04 | J | 0130 |
| 11 | W | 0873 | 03 | S | 0051 | 12 | C | 0129 |
| 12 | J | 0845 | 04 | L | 0044 | 02 | G | 0206 |
| 03 | Q | 0394 | 01 | G | 0007 | 01 | F | 0970 |
| 02 | W | 0554 | 07 | N | 0798 | 07 | F | 0568 |
| 07 | S | 0200 | 02 | Z | 0390 | 13 | G | 0001 |
| 08 | P | 0831 | 03 | M | 0459 | 01 | B | 0610 |
| 09 | E | 0634 | 12 | U | 0047 | 06 | U | 0409 |
| 06 | D | 0412 | 11 | Y | 0587 | 13 | R | 0321 |
| 09 | V | 0801 | 10 | H | 0415 | 05 | M | 0197 |
| 13 | Q | 0074 | 04 | C | 0048 | 04 | H | 0805 |
| 03 | V | 0594 | 03 | Q | 0265 | 08 | Z | 0709 |
| 08 | O | 0597 | 07 | B | 0496 | 06 | P | 0791 |
| 06 | A | 0149 | 06 | V | 0261 | 01 | X | 0407 |
| 04 | S | 0231 | 07 | W | 0878 | 12 | J | 0486 |
| 12 | D | 0274 | 02 | N | 0365 | 05 | Y | 0633 |
| 02 | X | 0462 | 01 | R | 0430 | 10 | K | 0182 |
| 11 | G | 0459 | 13 | B | 0036 | 08 | W | 0308 |
| 03 | K | 0570 | 05 | N | 0295 | 12 | V | 0283 |
| 04 | O | 0565 | 02 | B | 0324 | 03 | Y | 0524 |
| 12 | X | 0159 | 12 | O | 0106 | 07 | O | 0179 |
| | | | 04 | M | 0680 | | | |

கிறைசேரி

## தனிப் பாசோதனைக் குழு கலைக்கப்பட்டது

பம்பலபிட்டி, வெள்ளி

கூட்டரசாங்கத்தின் காலத்தில் நிதிஅமைச்சின் காரியாலயத்தில் ஏற்படுத்தப்பட்ட நிகர் பரிசோதனைக்குழு தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் கலைக்கப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது, இப்பகுதிக்கு பொறுப்பாகவிருந்த அதிகாரி திரு. சண்முகராசா உடனடியாக வேறு இலாகாவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 'சேவையே எங்கள் நோக்கம்'

நாரம்மல, வெள்ளி

"தேசிய அரசாங்கத்தின் நோக்கம் நாட்டிற்கு சேவை செய்வதே. எங்களுக்கு மக்களுடைய ஆதரவும் ஒற்றுமையும் வேண்டும். சிலர்கள் இந்த நாட்டில் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயற்சித்தார்கள். ஆனால் மக்கள் அதை மாற்றி அமைத்துவிட்டார்கள்" என்று கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றின்போது பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## பாலும் பணிசுமல்ல; இனி பிஸ்கட்!

கொழும்பு, வெள்ளி

அரசினர் பாடசாலைகளில் இனிப் பிள்ளைகளுக்கு நண்பகலில் பாலும் பணிசும் வழங்குவதற்குப் பதில் 'பிஸ்கட்' வழங்கப்படவிருக்கிறது. ஒரு பிள்ளைக்கு 6 பிஸ்கட்டுகள் சீல்வைத்து அடைக்கப்பட்ட பாக்கட்டுகளில் வழங்கப்படும். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒருவாரத்துக்குத் தேவையான பிஸ்கட்டுகள் முதலில் கொடுக்கப்படும்.

கொழும்பு, வெள்ளி

சிங்கள - இந்து புதுவருடப் பிறப்பன்று பாவிப்பதற்கு ஏராளமான மாவு, சீனி, பருப்பு ஆகியன கையிருப்பில் [illegible] கூறினர்

## ஷேக்அப்துல்லா மீது நடவடிக்கை நிச்சயம்
### சாஸ்திரி எச்சரிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 2

சீனப்பிரதமர் திரு. சூ என் லாயை சந்தித்தது உட்பட ஷேக் அப்துல்லாவின் பல சமீப செயல்களுக்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கூடும் என பிரதம மந்திரி சாஸ்திரி இன்று லோகசபையில் கூறினர்.

ஆனால் இவ்விஷயத்தில் ஓரிரண்டு நாட்கள் காத்திருக்க வேண்டும் என்றும், இன்றிரவு அல்ஜியர்ஸிலுள்ள இந்தியத் தூதர் டில்லி வருகிறார் என்றும் அவரிடம் விஷயங்களை அறிந்த பின்பு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி முடிவு செய்யப்படும் என்றும் பிரதமர் கூறினர். இவ்விஷயத்தில் உறுப்பினர்களின் கவலையில் தமக்கும் பங்கு உண்டு என அவர் கூறினர்

"அப்துல்லாவை சீனவுக்குச் செல்ல ஒருபோதும் அனுமதியோம். இதை மீறி அவர் பீகிங் போனால் அதனால் ஏற்படவிருக்கும் விளைவு-களை ஷேக் அப்துல்லா அனுபவிக்க வேண்டும்" என்றும் சாஸ்திரி கூறினர்.

ஷேக் அப்துல்லா பற்றி விரிவான அறிக்கை வெளியிட தமக்கு திங்கட்கிழமை வரை அவகாசம் வேண்டும் என வெளிநாட்டு மந்திரி திரு. சுவரண்சிங் கோரினர். சபாநாயகர் இதற்குச் சம்மதித்தார்.

ஆனால் அடுத்த 2 நாட்களில் ஷேக்அப்துல்ல நாட்டுக்கு அதிக தீமை செய்யாமல் பார்த்துக்கொள்ள முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என சுவரண்சிங் கூறினர்.

## கடன் தொல்லையால் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

தாங்கமுடியாத கடன் தொல்லையால் கனகர் ராசரத்தினம் (52 வயது) என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் வண்ணார்பண்ணையில் இடம்பெற்றது. இதுபற்றி மரண விசாரணை அதிகாரி எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்

இறந்தவரின் மனைவி சரஸ்வதி சாட்சியமளிக்கையில் தனது கணவர் அளவுக்கு மீறிய குடிகாரரென்றும் பெரிய கடனாளியென்றும் சொன்னர். சம்பவம் நடைபெறுவதற்குச் சிலமணி நேரத்துக்கு முன்னுல் தமது கணவர் குடிவெறியுடன் வந்தாரென்றும் உணவருந்திவிட்டு வெளி விறாந்தையில் படுக்கப் போனரென்றும் சில மணி நேரத்துக்குப் பிறகு கதிரை தட்டுப்பட்டு விழுந்த சத்தம் கேட்டுத் தான் ஓடியபோது கணவர் விறாந்தை வளையில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் தூங்கிக்கொண்டிருந்ததைத் தாம் கண்டாரென்றும் கூறினர்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## சுன்னுகம் சந்தைக்கு குடிநீர் விநியோகம்
### பட்டினசபை நடவடிக்கை

சுன்னுகம், சனி

சுன்னுகம் சந்தைக்கான குடிநீர் விநியோகத் திட்டமொன்றைச் சுன்னுகம் பட்டினசபை மேற்கொண்டுள்ளது. மக்கள் குடிநீர் வசதிக்காகவும், சந்தை மண்டபங்களைச் சுத்திசெய்யும் நோக்கத்துடனும் மேற்படி திட்டம் உருவாகியுள்ளது. இதற்காக 18,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வேலை ஒப்பந்தகாரர் 3 மாதங்களில் வேலைகளைப் பூர்த்திசெய்வதாக ஒப்புக்கொண்டுள்ளனர். ஆங்காங்கே குழாய்நீர் விநியோக நிலையங்களை ஏற்படுத்தி மக்கள் பாவிப்புக்குவிட உத்தேசித்துள்ளனர். பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் எட்டு வீதிகளுக்கும் தார் ஊற்றி 80,000 ரூபா செலவில் வீதிகளைப் பழுதுபார்க்கும் திட்டமொன்றும் உருவாகியுள்ளது.

## டாக்டர் கே. கணேசன்

டாக்டர் கே. கணேசன் பிரிட்டன் சென்று இரண்டே வருடங்களில் எம். ஆர். சி. ஓ. ஜி (கிரேட் பிரிட்டன்), எப். ஆர். சி. எஸ். (எடின்பர்ச்) ஆகிய இரு உயர்தர பட்டங்களைப் பெற்று சென்ற ஞாயிறன்று இலங்கை திரும்பினர்.


**ARROWS CLUB**

355, Navalar Rd, Jaffna.

Members Get-To-Gather At 7 p m on 4th April.

**"CLUB NIGHT"**

Dinner, Dance, Tombola Etc.

**FILM STARS!**

Miss Florance Baldsing

And [illegible]

Miss Roaini Kamala

Appearing for the first time in Jaffna.

Guests Of Members By Cards Only.

106


## பிரதமருக்கு தமிழில் நல்லாசி

யாழ்ப்பாணம், வெள்ளி

கந்தரோடை சன்மார்க்க தவகூடத்தைச் சேர்ந்த திரு. ஆ. சாந்தகுரு திரு. டட்லி சேனநாயகா பிரதமரானதை யிட்டு நல்வாழ்த்துத் தந்தி ஒன்றை தமிழில் அனுப்பியுள்ளார்.

## 'ஈழநாடு' சூறவளி நிதி

ஈழநாடு சூறவளி நிதிக்கு நேற்றுப் பிற்பகல் பருத்தித்துறையைச் சேர்ந்த ஓர் அன்பர் வழங்கிய 10 ரூபாவுடன் இதுவரை பணமாகவும், பொருளாகவும் 27,724 ரூபா 25 சதம் வசூலாகியுள்ளது.

## மரண அறிவித்தல்

**திருமதி எமலி பிள்ளையம்மா-காசிநாதர்**

திருமதி வி. சி. சின்னத்தங்கம் கலைதம்பியினதும், திரு. டி. சே. மார்க்கண்டு (தலைவாக்கொல்லை) அவர்களினதும் அருமைத் தாயாரும், திரு. உ. க. தேவகடாட்சம், திருமதி தேவஅருள் பொன்னையா, திருமதி திருமலர் பொன்னையா, ஆகியோரின் பாட்டியாருமாகிய திருமதி எமிலி பிள்ளையம்மா காசிநாதர் அவர்கள் கர்த்தருக்குள் மறைந்துவிட்டார் அவரின் பிரேதசேம ஆராதனை இன்று (3-4-65) மாலை 4 மணிக்கு நவாலி 'தவமனை' திரு உ. க. தேவகடாட்சம் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். பிரேதம் நல்லடக்கத்துக்காக பொன்னாலை சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி [illegible] அவர்களது அச்சகத்தில் 1965-ம் [illegible] மாதம் 3-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org